நம்மைப் பற்றிக் குறைவாகவும், ஆண்டவரைப் பற்றி அதிகமாகவும் கற்றுக்கொள்.

– புனித மரியா மெக்கில்லோப்

வெற்றியில் நாம் மனம் நிறைந்துவிடக் கூடாது; மாறாக மாட்சிமிகு கிறிஸ்துவோடு நாம் வாழும் மகிமைமிக்க வாழ்வில் தான் நாம் ஆர்வம் கொள்ள வேண்டும்.

திருமண விருந்தில் உபசரிக்கும் பணியாளர்களைப் போல நம்பிக்கையும் எதிர் நோக்கும் கொண்டவர்களாகவும், மாபெரும் சாத்தியக்கூறுகளைத் தேடுவதில் ஆர்வம் கொண்ட அன்னை மரியாவைப் போலவும் நாம் திகழ வேண்டும். நம் அன்னை மரியா தம் வாழ்க்கையில் கடவுளுக்கு அர்ப்பணிக்கக்கூடிய அன்பு, மகிழ்ச்சி, அமைதிய ஆகியவற்றில் முழுமையாக நம்பிக்கைக் கொண்டார். இறையரசின் திறவுகோல்களான இவற்றைத் தான் கடவுளும் நமக்குத் தருகின்றார் என்பதைக் கற்பணை செய்துபாருங்கள். இந்த மாபெரும் உண்மையை நாம் நம்பினோமென்றால், சிறியவற்றுக்காக நாம் திட்டமிடமாட்டோம். அவரின் உருமாற்றம் தரும் அன்பை அரவணைத்துக் கொள்வோம். இது தான் உண்மையான ஞானம். நமக்குக் கொடுக்கப்பட்ட உண்மையை அறிந்து அதில் வாழ முயற்சிப்போம். “ கடவுளிடம் மட்டுமே என் உள்ளம் இளைப்பாறுதல் அடையும்... அவரே என் கற்பாறை, என் அரண், என் வலிமை. ஏனென்றால் நான் அசைவுறேன்.. அவரில் நம்பிக்கைக் கொள்வேன்.. உங்கள் உள்ளத்தை அவரிடமே கொட்டுங்கள்..”

ஞானம், அன்பு, நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கு என்னும் எண்ணெயை உடன் எடுத்துச் செல்ல மறக்கவேண்டாம். நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் உடனடியாக அன்பு செய்து ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார் இறைவன். நமக்கு புகலிடம் அளிக்கவும், அவரின் மாபெரும் அன்பின் ஒளியில் நம்மை மூழ்கவைக்கவும், அவர் ஏங்குகிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவரின் ஒளியை எந்த இருளும் அணைத்துவிட முடியாது. உருமாற்றம் பெற எப்போதும் தயாராய் இருந்து, நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும், ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவைச் சந்திக்கத் தயாராய் இருப்போம்.

அவரை நாம் சந்திக்கக் காத்துக்கொண்டிருக்கும்போது, நம்முடைய அன்பின் விளக்குகள் நம் உள்ளங்களில் எரிந்து, கொண்டிருக்கட்டும். விரிந்த கரங்களோடுக் காத்திருப்பவரும், நம்முடைய உள்ளங்களை அன்பு செய்பவருமான நம்முடைய அன்பரைச் சந்திக்க தாமதமாக செல்ல வேண்டாம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

ஞா.நூ: 6:12-16,
திபா:63:2-8; 1
தெச:4:13-18;
மத்:25:1-13

**வாரம் ஒரு வசனம்**

நம்முடைய நம்பிக்கை உயிர்த்த ஆண்டவரில் உள்ளது

INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

8 நவம்பர் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 32 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

### மானுடத்தைக் கட்டியெழுப்ப குணமளிப்பு

# எப்போதும் தயாராய் இருப்போம்!

ஊக்குவிக்கப்படுங்கள்! தம் பிள்ளைகளை ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பேன் என்று கடவுள் வாக்களித்துள்ளார். உயிர்த்து, நம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. நம்மில் இருந்தோர் பலர் இப்போது இறந்துவிட்டாலும், நம்முடைய நம்பிக்கை, ஊனுடலிலோ, படைப்புகளிலோ இல்லை. ஆனால், உயிர்த்தெழுந்த ஆண்டவரிடமே உண்டு. இந்த வாழ்க்கை, ஒரு பயணம்; நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கின் பயணம்; ஊனுடலில் நாம் கண்ட



Image: ©123rf.com